தினத் தந்தி
DAILY THANTHI



# தேசிய தர வரிசை பட்டியலில் முன்னணி பெற்ற இந்துஸ்தான் கல்வி குழுமம்

இந்திய அளவில் செயல்பட்டு வரும் உயர் கல்வி நிறுவனங்களின் தேசிய அளவிலான தரவரிசை பட்டியலை (என்.ஐ.ஆர்.எப்) மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் கடந்த 11–ம் தேதி வெளியிட்டார். 2020–ம் ஆண்டுக்காக உயர் கல்வி தரவரிசை போட்டியில் தமிழக அளவில் 260 கல்வி நிறுவனங்களும், இந்திய அளவில் ஆயிரக்கணக்கான கல்வி நிறுவனங்களும் பங்கேற்றன. மாணவர் தேர்ச்சி விகிதம், கற்பித்தல், கற்றல், வளங்கள், ஆராய்ச்சி, தொழில்முறை பயிற்சி உள்ளிட்ட 11 அம்சங்களை கொண்டு, பொறியியல், மேலாண்மை, பார்மசி, சட்டம், கட்டிடக்கலை மற்றும் மருத்துவம் ஆகிய பல்வேறு பிரிவுகளில் கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் அளிக்கும் ஒட்டுமொத்த கல்வி தரத்தின் அடிப்படையில் தர வரிசை அளிக்கப்படும்.

இதில்,இந்திய அளவில்கலந்து கொண்ட 1017 பொறியியல் கல்வி நிறுவனங்களில் இந்துஸ்தான் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி அண்டு சயின்ஸ் கல்வி நிறுவனம் 107–வது இடத்தை பெற்றுள்ளது. அதாவது, தேசிய அளவில் முதலிடம் பெற்றுள்ள 10 சதவிகித கல்வி நிறுவனங்களில் இடம் பெற்றுள்ளது. அதாவது, இந்திய அளவில் 25–வது இடத்தையும், தமிழக அளவில் 9–வது இடத்தையும், சென்னையில் 4–வது இடத்தையும் பெற்றுள்ளது. மேலும், தேசிய அளவில் பங்கு பெற்ற 66 ஆர்க்கிடெக்சர் கல்வி நிறுவனங்களில் 20–வது இடத்தை பெற்றிருக்கிறது.

கே.சி.ஜி காலேஜ் ஆப் டெக்னாலஜி கல்வி நிறுவனம் தேசிய அளவில் 200 முதல் 250 இடங்களுக்கான பட்டியலில் இடம் பெற்றுள்ளது. அதாவது, தமிழக அளவில் 39–வது இடத்தையும், சென்னையில் 13–வது இடத்தையும் பிடித்துள்ளது. குறிப்பாக, அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்த Non - Autonomous கல்லூரிகளில் தமிழக அளவில் 3–ம் இடத்தையும், சென்னையில் முதலாவது இடத்தையும் பிடித்துள்ளது. இந்திய அரசால் நிகர்நிலை பல்கலைக்கழகமாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட இந்துஸ்தான் நிகர்நிலை பல்கலைக்கழகம்தேசிய அளவில் 3–வது இடத்திலும், தமிழக அளவில் முதல் நிலையிலும் இருக்கிறது.

இந்த சாதனைகளுக்கு இந்துஸ்தான் கல்வி குழுமங்களின் இயக்குனரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான டாக்டர் ஆனந்த் ஜேக்கப் வர்கீஸ், அனைத்து துறை தலைவர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்களுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, இந்துஸ்தான் கல்வி குழுமம் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.